www.Padasalai.Net www.TrbTnpsc.com

HSL

11 - ஆம் வகுப்பு

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி - I

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 14 X 1 = 14

1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
2. ஆறாம் திணை என்னும் பாடப்பகுதியில் அ. முத்துலிங்கம் அவர்களால் சொல்லப்படும் நிலப்பகுதி
   அ) மலையும் மலைசார்ந்த இடமும் ஆ) பனியும் பனி சார்ந்த இடமும்
   இ) காடும் காடு சார்ந்த இடமும் ஈ) கடலும் கடல் சார்ந்த இடமும்
3. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டுமே உரிய மெய்கள் அ) க், ச், த், ப் ஆ) த், ட், ற், ன் இ) ப், வ் ஈ) ர், ழ்
4. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) பெரியவன் கவிராயர் ஈ) பாரதியார்
5. "சேயோன் மேய மைவரை உலகம்" என்றும் "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்றும் மலை பற்றிய குறிப்புகள் இடம் பெறும் நூல்கள் முறையே
   அ) தொல்காப்பியம், திருமுருகாற்றுப்படை ஆ) திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியம்
   இ) நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு ஈ) திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை
6. ஒப்புரவு என்பதன் பொருள் .......... .
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
7. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது? அ) மொழி பெயர்ப்பாளர்
   ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
8. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
   அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
9. செங்கயல், விரிகதிர் இச்சொற்களின் இலக்கணக் குறிப்புகள் முறையே அ) பண்புத்தொகை , வினைத்தொகை
   ஆ) தொழிற்பெயர், எண்ணும்மை இ) எண்ணும்மை, தொழிற்பெயர் ஈ) வினைத்தொகை, பண்புத்தொகை
10. தஞ்சைப் பெரியகோவிலை இராசராச சோழன்தான் கட்டினான் என்று உறுதி செய்தவர்
    அ) பிரடிரிகா வொன்ஸ்லீவிங் ஆ) ஷீல்ஸ் இ) குடவாயில் பாலசுப்ரமணியன் ஈ) எஸ்.கே. கோவிந்தசாமி
11. திருவாசகம் முழுமையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
    அ) வீரமாமுனிவர் ஆ) கால்டுவெல் இ) ஜி.யு.போப் ஈ) எல்லிஸ்
12. அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் - யார் யாரிடம் கூறியது? அ) அமைச்சர் கவிஞரிடம்
    ஆ) மன்னர் அமைச்சரிடம் இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
13. இரகசிய வழி என்னும் நூலைத்தழுவி எழுதப்பட்ட நூல்
    அ) இரட்சணிய யாத்ரிகம் ஆ) புரட்சிக்கவி இ) பாரதம் ஈ) மனோன்மணீயம்
14. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) சீறாப்புராணம் | - | 1) சி.சு. செல்லப்பா |
| ஆ) குற்றாலக் குறவஞ்சி | - | 2) ஜெயமோகன் |
| இ) யானை டாக்டர் | - | 3) உமறுப்புலவர் |
| ஈ) வாடிவாசல் | - | 4) திரிகூடராசப்பக் கவிராயர் |

அ) 3 4 2 1 ஆ) 3 2 4 1 இ) 1 4 2 3 ஈ) 2 3 4 1

பகுதி - II ( பிரிவு - 1)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 X 2 = 6

15. பாயிரம் பற்றி நீ அறியும் கருத்து யாது?
16. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?
18. சாழல் என்பது யாது?

**பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 X 2 = 4

19. தமிழ்நாட்டின் மாநில மரம் சிறுகுறிப்பு வரைக.
20. சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
21. நாட்டுப்புறத்திலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாக தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

**பிரிவு - 3 எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக.** 7 X 2 = 14

22. **கலைச் சொல்லாக்கம்** - பொருள் தருக.
23. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**
    அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
    ஆ) சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலை நாட்ட செய்தனர்.
24. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
    அ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிடும்.
    ஆ) முயற்சி செஞ்சா அதுகேத்த பலன் வராமப் போவாது
25. **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.** அ) துய்த்தல் ஆ) அறிந்து



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

26. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி எழுதுக. அ) முறையறிந்து ஆ) சிறுகோல்
27. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
அ) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனத்தை
ஆ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. பிண்ணாக்கு அல்லது நஞ்சிருக்கும்.
29. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.
அ) Shell seeds ஆ) Globalisation
*(செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)*
பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. பொரி, பொறி.
30. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளை எழுதுக. அ) # ஆ) ⌐

**பகுதி - III பிரிவு - 1**

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 4 X 2 = 8


31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.
33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக 4 X 2 = 8

35. மசானபு ஃபுகோகா - வின் ஐந்து வேளாண் மந்திரங்களை எழுதுக.
36. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் அரசியல் செய்திகள் குறித்து விவரிக்க.
37. ஜீவாவின் பேச்சுநடை குறித்து - சுந்தர ராமசாமி கூறுவன யாவை?
38. திராவிடர்களின் மலைப்பெருமிதம் குறித்து ஆர்.பாலகிருஷ்ணன் கூறுவனவற்றை எழுதுக.

பிரிவு - 3 எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக. 3 X 4 = 12

39. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கு. **(அல்லது)**
உவமை அணியை சான்றுடன் விளக்கு.
40. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச்சொற்களை உருவாக்குக.




41. தமிழாக்கி எழுதுக. 1) Nobody can hurt me without my permission.
2) Simplicity is nature's first step and the last of art.
3) A picture is worth a thousand words. 4) Knowledge rules the world.
**(செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)**
"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்னும் வலுவான ஒற்றை வரி நம்முள் அழுத்தமாகப் பதிகிறது. இது, திகட்டாத தெள்ளு தமிழ் திருவருட்பா தந்த வள்ளலாரின் கூற்று, வள்ளலார் ஏழு வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்றுத் தெய்வமணிமாலை, கந்தர் சரவணப்பத்து ஆகிய நூல்களை உருவாக்கினார். மனு முறை கண்ட வாசகம் என்னும் உரைநடை நூலை நமக்கு நல்கியவர். சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார்.
**வினாக்கள் :** 1. வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம் வாடினேன் - என்று பாடியது யார்?
2. ஏழு வயதில் வள்ளலார் எழுதிய நூல் எது? 3. வள்ளலார் தோற்றுவித்த சங்கம் யாது?
4. வள்ளலார் எழுதிய உரைநடை நூல் எது?
42. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக. **(அல்லது)** பொதுவியல் திணையை விளக்குக.
43. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்தினை எழுதி எவையேனும் மூன்று நயங்களை எழுதுக.

*தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,*
*கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,*
*தென் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்*
*வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ* - கம்பர்.

**பகுதி - IV1**

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3 X 6 = 18

44. காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க. **(அல்லது)** வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.
45. பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபு வழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க. **(அல்லது)** கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.
46. நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க. **(அல்லது)** யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக. 6
47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.
அ) சிற்றூரும் ........ எனத் தொடங்கும் புரட்சிக் கவி பாடல். ஆ) கெடும் என முடியும் குறட்பா.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com